நெடுங்குன்றம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை–திருமதி வனிதாஸ்ரீ அவர்கள்

ந.க.எண் 11/2024/2025 நாள்: 19.10.2024

பொருள் செங்கல்பட்டு மாவட்டம் - காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் - நெடுங்குன்றம் ஊராட்சி – நெடுங்குன்றம் கிராமம் - **CMDA – APU – Layout Division –Proposal for laying Out of house sites in S.No 145/2A, 2B1, 2B2, 183/1, 2, 3, 4, 184/1, 2A1, 2A2A, 2A2B, 3A, 3B, 4, 185/3 , 186/4, 5, 6, 7, 8, 9, 10, & 11 of Nedugundram Village** மனைஉட்பிரிவு அனுமதி- இறுதி மனை உட்பிரிவு வரைப்பட ஒப்புதல் வழங்கி உத்திரவிடல்.

பார்வை 01.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், 1, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை - 600 008. அவர்களின் கடித எண்.ஆர்.டி.1/0096/2024, நாள். 04.07.2024

02.G.O(ms).No.181, Housing and Urban Development (UD(1)) Department,Dated:09.12.2020

03.மனுதாரர் Thiru.S.V.Shri Ramalu and 4 others நாள் 26.07.2024

04.ஆணையாளர், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண்.2543/2024/அ4, நாள் .08.2024

05. நெடுங்குன்றம் ஊராட்சி பல்வகை இரசீது எண்: 2024-2025/35/7/18/7/171 .நாள் 19 .10.2024 ரூபாய்.2796430/- (ரூபாய் இருபத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று முப்பது மட்டும்)

உத்தரவு

பார்வையில் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தின்படி, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குன்றம் ஊராட்சி நெடுங்குன்றம் கிராமம் - CMDA – APU – Layout Division –Proposal for laying Out of house sites in S.No 145/2A, 2B1, 2B2, 183/1, 2, 3, 4, 184/1, 2A1, 2A2A, 2A2B, 3A, 3B, 4, 185/3 , 186/4, 5, 6, 7, 8, 9, 10, &11 of Nedugundram Village, Thiru.S.V.Shri Ramalu and 4 others , No.12 , 3 rd Floor, 9 th Street, I –Block , Anna Nagar East , chennai- 600 102 என்பவருக்கு மனைஉட்பிரிவு வரைபட அனுமதி கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி எல்லை கற்களால் வரையறுக்கப்பட வேண்டும்.மனைபிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரஸைக் கற்களை கொண்டு மனுதாரர்கள் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும். அதோடு தகுந்த சிறு பாலங்கள்,சாக்கடை, வடிகால், தூப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்துதர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
2. தெரு முனையில் அமையும் மனைகளின் முனைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக தேர்வு செய்யப்பட்ட மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே வேண்டுமல்லாது, குடை பண்டக சாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.
4. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும் தவிர எக்காலத்திலும் கட்டிடம் மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ மாற்றப்படுத்தும் வகையில் எந்த மனையும் திருத்தி அமைப்பதோ, ஊட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கு பயன்படுத்த கூடாது.
5. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களும் கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட் வரம்புக்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாது சுற்றுச்சுவர் அல்லது வேலை தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக் கூடாது.
6. மனையின் பின்புறம் எல்லைக்குள் கட்டிடத்திற்கும் இடையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி இருக்க வேண்டும். இந்த பின்பக்க திறந்தவெளியில் கிணறு, மல அறை, எரு குழி, மாட்டுததொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமாக பின் எல்லையில் நிலத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
7. ஊராட்சி நிபந்தனைக்குட்பட்டு வழங்கப்படுகிறது.
8. குடக்கால் போட தேவையான அளவிற்கு அதிகமாக தரைகளை சமப்படுத்த வேண்டும்.நிலச்சரிவை நேர் செய்யாவோ மனையிலிருந்து மண் தோண்டி எடுத்து பள்ளங்கல் கழனி ஏற்படுத்தக் கூடாது.
9. மனையின் சொந்தகாரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுத்துவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுதிட்டங்கள் விற்பனை பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்பட வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு : மனைபிரிவு வரைபடம்

19/10/24
தலைவர்
நெடுங்குன்றம் ஊராட்சி

பெறுநர் :

19/10/2024

Thiru.S.V.Shri Ramalu and 4 others ,
No.12 , 3 rd Floor, 9 th Street,
I –Block , Anna Nagar East ,
chennai- 600 102

நகல் 2.உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது..